Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை ௨0 (05-12-1992) சனிக்கிழமை ஓசை 291

## அஞ்சல் அடையாள அட்டை விநியோகிக்க நடவடிக்கை

யாழ். மாவட்ட க. பொ. த. சாதாரண பரீட்சார்த்திகளுக்கான அஞ்சல் அடையாள அட்டைகள் ஞாயிறு நண்பகல்வரை விநியோகிக்கப்படும் என வட மாகாண உதவி அஞ்சல் அதிபர் நாகம் ச. ம. சேதுகாவலர் அறிவித்துள்ளார். நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள பல ஆயிரக்கணக்கான பரீட்சார்த்திகள் அஞ்சல் அடையாள அட்டைக்காக விண்ணப்பித்துப் பல மாதங்களாகியும் அதற்கான வெற்று அட்டைகள் வராமையால் அடையாள அட்டைகள் வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. பலத்த சிரமத்தின் மத்தியில் தரைமார்க்கமாக நேற்று பத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கொப்பேகடுவ குண்டுவெடிப்பு விவகாரம்

# ராணுவத்திற்குள் பிளவை தவிர்க்க பிரேமதாசா அரசு பகீரத முயற்சி

லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டமைக்கு இராணுவத்தில் இருந்த அவருக்கு எதிரானவர்களும்,அரசாங்கமுமேகாரணம்என திருமதி லலி கொப்பேகடுவ குற்றம் சாட்டியுள்ளதைத் தொடர்ந்து இராணுவத்திற்குள் எழக்கூடிய பிளவைத் தவிர்ப்பதில் சிறிலங்கா அரசாங்கம் தீவிர அக்கறைகாட்டுவதை அவதானிக்க முடிகின்றது. இதன் ஒரு கட்டமாக லெப். ஜெனரல் கொப்பேகடுவ கொல்லப்பட்ட தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளதற்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

இராணுவத்தின் உள்ளே அதிகாரிகள் மத்தியில் நிலவிய போட்டி பகை காரணமாகவே கொப்பேகடுவ கொல்லப்பட்டார். கொப்பேகடுவவின் அதிகாரத்தைக் குறைக்கவும், இராணுவத்தில் அவரது முக்கியத்துவத்தை குறைக்கவும் செய்யப்பட்ட சதியே கொப்பேகடுவவின் கொலை என கொப்பேகடுவவின் மனைவி லலி கொப்பேகடுவ குற்றம் சாட்டியிருந்தார்.

இக் குற்றச்சாட்டானது சிறிலங்கா இராணுவத்தில் பெரும் பிளவை உண்டு பண்ணி பெரும் நெருக்கடியை ஏற்படுத்த கூடியதாகும். இதன் மூலம் டென்சில்கொப்பேகடுவவின் ஆதரவாளரும் எதிர்ப்பாளரும் வெளிப்படையாக மோதிவிடக் கூடிய அபாய நிலையும் உருவாகி வந்தது.

இந்நிலையில் தான் டென்சில் கொப்பேகடுவ மரணமடைந்த தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் உரிமை கோரியதையும், தாக்குதல் நடாத்திய போராளிகளுக்கு தலைவர் பிரபாகரன் பரிசில்கள் வழங்கும் படங்களையும் ரூபவாகினி நேற்று ஒளி பரப்பியது.

அத்தோடு, பிரான்சிலுள்ள விடுதலைப்புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர் டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நுவரெலியா தோட்டங்களில் புலிகள் ஊடுருவலாம்

நுவரெலியா மாவட்டத்தில் இருக்கும் தேயிலைத் தோட்டங்கள் சிலவற்றில் புலிகள் ஊடுருவி இருப்பதாக கூறப்படுவதையடுத்தே அம் மாவட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு சோதனையிடப்படுவதாகவும், தோட்டங்களில் சந்தேகத்திற்கு இடமானவர்களை கைது செய்யும் பொருட்டு தேடுதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## அம்பாந்தோட்டை பகுதியில் 100க்கு மேற்பட்டோர் கைது

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுற்றிவளைத்துத்தேடுதல் நடாத்திய பொலிஸார் அங்கிருந்து சுமார் 40 தமிழ் இளைஞர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களைக்கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## புத்தளம் முந்தல் கடலில் 15 தமிழ் இளைஞர் கைது

[புத்தளம்]

புத்தளம் மாவட்டம் முந்தலில் 15 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த 30 ஆம் திகதி வாள், கிறிஸ்கத்தி, வெடிமருந்து ... தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவர்கள் முந்தல் கடற்கரையிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்தனராம்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்

## 300 இராணுவ சிப்பாய்கள் மாதம் தோறும் ஓட்டம்

### வெல்ல முடியாத யுத்தம் என உணர்கின்றனர்

[கொழும்பு]

மாதாந்தம் குறைந்தது 300 இராணுவத்தினர் படையிலிருந்து ஓடுவதாக சிரேஷ்ட இரா... யுத்தத்தில் வெல்ல முடியாது என்ற உணர்வு இராணுவத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ளதாலும் யுத்தத்தின் உக்கிரத்... தில் வெற்றிபெற தேவையான ஆயுதங்களும் வேறு வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்ற குறை அதி...

## புலமைப் பரிசில் முடிவு ஜோண்பொஸ்கோ சாதனை



கா. பிருந்தாபன்

[யாழ்ப்பாணம்]

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. மேற்படி பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவன் முதலிடத்தைப் பெற்று சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்

யாழ் மாவட்டத்தில் மேற்படி பாடசாலை மாணவர்கள் 70 பேர் சித்தியடைந்து முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், கா. பிருந்தாபன் என்ற மாணவன் 199 புள்ளிகளைப்பெற்று அகில இலங்கையில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 59 மாணவர்களும் வேலணைக் கோட்டக் கல்வி பிரிவிற்குட்பட்ட பாடசாலையில் 11 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். (யோ,17)

## மட்டக்களப்பு பா. உ.களுக்கு மேலதிக பாதுகாப்பு

மட்டக்களப்பு நகரத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள இரு பாராளுமன்ற உறுப்பினர்களது வீடுகளுக்கு முன்பாக வீதித் தடைகள் போடப்பட்டிருக்கின்றன. அத்துடன் வீட்டு வளாகத்தினுள்ளும் பொலிசார் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றனர். இதற்காக மேலதிக பொலிசார் கடமைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைவிடுக்காமலே பொலிசார் இப்பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருவதாக கூறப்படுகிறது.

## பாடசாலை புத்தகங்கள் இம்மாத நடுப்பகுதியில் வரும்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாட புத்தகங்கள் மற்றும் இலவச சீருடைகள் இம்மாத நடுப்பகுதியில் இங்கு எடுத்துவரப்படவுள்ளன

1993 புதிய கல்வி ஆண்டு மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்களும் இவர்க... ளுமே எடுத்து வரப்படவுள்ளன.

இவை எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்படவுள்ள குமண கப்பலில் ஏற்றி வருவதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரி...

## அம்பாந்தோட்டைப் பகுதியில்
## 100க்கு மேற்பட்டோர் கைது

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுற்றிவளைத்துத்தேடுதல் நடாத்திய பொலிஸார் அங்கிருந்து சுமார் 40 தமிழ் இளைஞர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களைக்கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## புத்தளம் முந்தல் கடலில்
## 15 தமிழ் இளைஞர் கைது

[புத்தளம்]

புத்தளம் மாவட்டம் முந்தலில் 15 தமிழ் இளைஞர்கள் கைது செய்யபபட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த 30 ஆம் திகதி வாள், கிறிஸ்கத்தி, வெடிமருந்து ஆகிய பயங்கர ஆயுதங்களுடன் படகில் வந்த 15 பேரும் கடற் புலிகள் என்ற சந்தேகத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவர்கள் முந்தல் கடற்கரையிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்தனராம்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் குருநாகல் பகுதியிலுள்ள எம்பிலிப்பிட்டியாவிற்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புளத்சிங்களத் தோட்டத்தில்
## இரு தமிழர் கைது

புளத்சிங்கள பகுதியிலிருக்கும் இறப்பர்த் தோட்டம் ஒன்றில் இருந்து தமிழ் இளைஞர் ஒருவரும், யுவதி ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் முஸ்லிம் பெயருடைய கடவுச்சீட்டுக்களும், அடையாள அட்டைகளும் இருக்கக் காணப்பட்டதாகப் பொலிஸார் கூறியுள்ளனர். இதனைத் தொடர்ந்து இப்பகுதியெங்கும் பொலிஸார் தீவிர தேடுதலை மேற்கொண்டுள்ளனர் இதேவேளை கொட்டாஞ்சேனைப் பகுதியில் மற்றுமொரு தமிழ் இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## நடவடிக்கைப் பணியகம்
## விரைவில் மூடப்படும்

(கொழும்பு)

மறைந்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவினால் அமைக்கப்பட்ட விசேட நடவடிக்கைப் பணியகம் விரைவில் மூடப்படவுள்ளது. இப் பிரிவின் தலைமைச் செயலகம் அமைந்திருந்த கௌவர் வீதி அலுவலகம் இம் மாத இறுதிக்குள் மூடப்படுமென அதிகார பூர்வ வட்டாரங்கள் கடந்த திங்களன்று கொழும்பில் கூறியுள்ளன.

இப் பணியகத்துடன் இணைக்கப்பட்டிருந்தவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

டார். கொப்பேகடுவவின் அதிகாரத்தைக் குறைக்கவும், இராணுவத்தில் அவரது முக்கியத்துவத்தை குறைக்கவும் செய்யப்பட்ட சதியே கொப்பேகடுவவின் கொலை என கொப்பேகடுவவின் மனைவி லலி கொப்பேகடுவ குற்றம் சாட்டியிருந்தார்.

ஏற்படுத்த கூடியதாகும். இதன் மூலம் டென்சில்கொப்பேகடுவவின் ஆதரவாளரும் எதிர்ப்பாளரும் வெளிப்படையாக மோதிவிடக் கூடிய அபாய நிலையும் உருவாகி வந்தது.

இந்நிலையில் தான் டென்சில் கொப்பேகடுவ மரணம

களுக்கு தலைவர் பிரபாகரன் பரிசில்கள் வழங்கும் படங்களையும் ரூபவாகினி நேற்று ஒளி பரப்பியது.

அத்தோடு, பிரான்சிலுள்ள விடுதலைப்புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர் டென்சில் கொப்பேகடுவ கொல்லப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# 300 இராணுவ சிப்பாய்கள்
# மாதம் தோறும் ஓட்டம்
## வெல்ல முடியாத யுத்தம் என உணர்கின்றனர்

[கொழும்பு]

மாதாந்தம் குறைந்தது 300 இராணுவத்தினர் படையிலிருந்து ஓடுவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவததாக ''திவயின'' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் வெல்ல முடியாது என்ற உணர்வு இராணுவத்தின் மத்தியில் ஏறபட்டுள்ளதாலும் யுத்தத்தின் உக்கிரத்தாலும் இவ்வாறு இராணுவததினர் விலகி ஓடுவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

படையினருக்கு இந்தயுத்தத்தில் வெற்றிபெற தேவையான ஆயுதங்களும வேறு வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்ற குறை அதிகாரிகள் மத்தியிலும் சிப்பாய்கள் மத்தியிலும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பீப்பாய் குண்டு தயாரிக்க
# 22,500 கிலோ வெடிப்பொருள்

(கொழும்பு)

சுமார் இருபத்திரண்டாயிரத்து ஐநூறு கிலோ ஜெலிக்நைற் வெடிப் பொருள் ராகம வெடிப் பொருள்கள் களஞ்சியத்தில்இருந்துமட்டுப்பீப்பய் குண்டுகள் தயாரிப்பிற்குப் பெறப்பட்டுள்ளதாக வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா தெரிவித்துள்ளதாக ராவய செய்தி வெளியிட்டுள்ளது

இதேவேளை ராகம பகுதியிலுள்ள வெடிப் பொருள்கள் களஞ்சியத்தில் டைனமிட்ஸ் வெடிப் பொருள் 13600 கிலோவும் நபிற் வெடிப்பொருள் 2500 கிலோவும் பாதுகாப்பற்ற நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அரச பாதுகாப்பு பரிசோதகரும் பகுப்பாய்வாளருமான ஜி எஸ். குணதிலக தெரிவித்துள்ளார்.

இவற்றை உடனடியாக களஞ்சியத்திலிருந்து அப்புறப்படுத்தி நடுக்கடலில் ''பாஜ்'' களில் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டும் என இவர் வற்புறுத்தியுள்ளார்.

இப்பகுதியில் வெடிவிபத்து எதுவும் ஏற்படின் ராகம பகுதி முழுவதும் அழிந்து போகக் கூடிய நிலை ஏற்படும் எனவும் இவர் எச்சரித்துள்ளார்.

## வட - கிழக்கு பிரதேசத்திற்கு
## புதியகடற்படைத் தளபதிகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிராந்தியங்களுக்கு புதிய கடற்படை தளபதிகளை சிறிலங்கா அரசு நியமித்துள்ளது.

வட பிராந்திய கடற்படைத் தளபதியாக கொமடோர் தயா சந்தசிரி நியமிக்கப்பட்டிருக்கிறார் இவர் இதுவரை கடற்படைத் தலைமையகத்தில் செயற்பாட்டுப் பணிப்பாளராக கடமையாற்றி வந்தார் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக கொமடோர் டி கே. தஸநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

அதே வேளை கடற்படையின் பிரதம உத்தியோகத்தராக கொமடோர் சிசில் திஸேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த பல வருடங்களாக கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி பிரிகேடியர் லக்கி அல்கம, வட பிராந்திய இராணுவத்தளபதி பிரிகேடியர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

டுகள் செய்யப்பட்டிருக்கிறது என தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள இரு பாராளுமன்ற உறுப்பினர்களது வீடுகளுக்கு முன்பாக வீதித் தடைகள் போடப்பட்டிருக்கிறன. அத்துடன் வீட்டு வளாகாக மேலதிக பொலிசார் கடமைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைவிடுக்காமலே பொலிசார் இப்பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருவதாக கூறப்படுகிறது.

## பாடசாலை புத்தகங்கள்
## இம்மாத நடுப்பகுதியில் வரும்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாட புத்தகங்கள் மற்றும் இலவச சீருடைகள் இம்மாத நடுப்பகுதியில் இங்கு எடுத்துவரப்படவுள்ளன

1993 புதிய கல்வி ஆண்டு மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்களும் இவர்களுக்கான இலவச சீருடைகளுமே எடுத்து வரப்படவுள்ளன.

இவை எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்படவுள்ள குமண கப்பலில் ஏற்றி வருவதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மாதகல் பகுதிகளுக்கு
## தபால் எடுத்து செல்ல முயற்சி

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வலிகாமம் வடக்கு. மேற்குப் பகுதிகளில் சிக்கியுள்ள உறவினர்களுக்கான தபால் விநியோகம் நடைபெறவுள்ளது

இதன்படி மாதகல், இளவாலை, பன்னாலை, தெல்லிப்பழை, கொல்லன்கலட்டி ஆகிய பகுதிகளில் உசிக்கும்மக்களுக்கான கடிதங்களைமாதத்தில் இரண்டுதடவைகள் எடுத்துச் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இணங்கியுள்ளதாக வட மாகாண உதவி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. சேதுகாவலர் தெரிவித்தார்

மேற்படி பகுதிகளில் உள்ள உறவினர்களுக்கு கடிதங்களை அனுப்ப விருபபுவோர் அவற்றைப் பூரண விலாசத்துடன் தபால்பெட்டிகளில் சேர்க்குமாறும், அச்சாதாரண கடிதங்களின் கீழ் அந்தந்தப் பகுதியின் பெயரின் அருகில் (நியமம்-PROPER) எனக் குறிப்பிடுதல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நொச்சிமோட்டையில்
## காவலரண்கள் அமைப்பு

(வவுனியா)

நொச்சிமோட்டை பாலத்திற்கருகில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் காவல் அரண்கள் அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிக்கருகில் உள்ள பற்றைக் காடுகளை வெட்டித் துப்புரவு செய்யும் இராணுவத்தினர் தண்டவாளங்கள, சிலிப்பர்கட்டைகள் போன்றவற்றை உபயோகித்து காவல் அரண்களும், பதுங்குகுழிகளும் அமைதது வருகின்றனர்

இராணுவததினர் பேயாடி கூழாங்குளம் பஸ்தரிப்பு இடத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ரொனி மீதான வழக்கு வாபஸ்;
# சில தினங்களில் நாடு திரும்புகிறார்

முன்னாள் நிதி அமைச்சர் திரு. ரொனிடிமெல் மீது தொடர்ந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. நீதிபதி டி.பி வீரசூரிய நேற்று இதனை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

1986 ஆம் ஆண்டுசெப்டெம்பர் மாதத்திற்கு முன்னர் 50,000 டொலர் அல்லது இருபது இலட்சம் ரூபாவை மோசடி செய்தார் என்று இவர் மீது அரசாங்கம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்திருந்தது.

இவரின் மீதான குற்றச்சாட்டிற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை என நேற்று நீதி மன்றத்தில் அரச சட்டத்தரணி மெகான் பீரிஸ் தெரிவித்து தனது கட்சிக்காரர் வழக்கை வாபஸ் பெறுவதாக தெரிவித்தார்.

1970 - 1977 ஆம் ஆண்டு வரை சுதந்திரக் கட்சியில் அமைச்சராகவும் 1977 - 1987 வரை ஐ தே கட்சியின் நிதி அமைச்சராகவும் கடமை ஆற்றிய இவர் 1987 ஆம் ஆண்டு மீண்டும் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து பொதுத் தேர்தலுக்கு வேலைகளை செய்தார்.

இத் தேர்தலில் தோல்விய டைந்த இவர் வெளிநாட்டுக்கு சென்றார். இவர் வெளிநாட்டில் இருக்கும் போது இவருக்கு எதிராக இவ் வழக்கு சுமார் 3 வருடங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை டிசம்பர் 14 ஆம் திகதி இவர் நாடு திரும்ப உள்ளார். இவர் நாடு திரும்பியதும் ஐ.தே.கட்சியில் இணைவார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

# அடுத்த வருட முற்பகுதியில்
# தேர்தல் நடைபெறலாம்
## - தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

அடுத்த வருட முற்பகுதியில் தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் உண்டெனவும் இத் தேர்தலில் சுமார் ஒரு கோடி பேர் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாக இருப்பர் எனவும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தேர்தலுக்கான பூர்வாங்க வேலைகள் யாவும் முடிவடையும் நிலையில் இருப்பதாகவும் அநேகமாக தேர்தல் ஜூலை மாதமளவில் நடைபெறலாம் என்றும் குறிப்பிட்டார்.

தேர்தலுக்கு தேவைப்படும் உத்தியோகத்தர், வாக்களிப்பு மத்தியஸ்தானம் போன்றவை தொடர்பாக ஆராய்வதற்கான கமிட்டி மிக விரைவில் இது தொடர்பாக தீர்மானிக்க இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.

(சி-5510)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறீஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna.

(சி-5450)

### மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான முறையில் நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் மலிவாக செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.

(3733)

### சங்கீதம் வினா-விடை

சங்கீதம் வினாவிடை (ஆண்டு 10, 11) விற்பனையாகிறது. (O/L) பரீட்சையில் உச்சப் புள்ளிபெற உதவும் வழிகாட்டி. முந்நூற்றுக்கு மேற்பட்ட வினாக்களுக்கு விரிவான விடைகள் இராக லட்சணங்கள், இசைக் குறிப்புகள், இசைமேதைகளின் வரலாறுகள் கொண்டது எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(3727)

### தவறிவிட்டது

1-12-92 அன்று திருமதி சரஸ்வதி காசிநாதன் (குமுழமுனி, காரைநகர்) என்பவருடைய அடையாள அட்டை யாழ். இராமநாதன் வீதிக்கும்-சங்கிலியன் வீதிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(3747)


## வீரசிங்கம் நினைவு விழா

கூட்டுறவு இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படும் வீரசிங்கம் அவர்களின் 28 ஆவது நினைவு தினம் இன்று காலை கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கூட்டுறவுக் கல்லூரி மாணவர்களின் கவிதையரங்கும், வில்லிசையும் இடம்பெறவுள்ளன.


### பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை

B.A 1993 ஏப்ரல் மீட்டல், வினாவிடை வகுப்பு

பொருளியல்
S. வரதராஜன் B.A. (Hons)

ஆரம்பம்:
5-12-92
சனி 2.00 PM

(சி-5523)


# நோய்காவிகளைக் கட்டுப்படுத்த புதிய பிரிவு ஆரம்பம்

## —மாநகரசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தவும், தொற்று நோய்க் காவிகளைக் கட்டுப்படுத்தவும் புதிய கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்றை யாழ் மாநகர சபை அமைக்கவுள்ளது. இம்மாத இறுதியில் அமைக்கப்படவிருக்கும் இக் கட்டுப்பாட்டுப் பிரிவு நுளம்பு, இலையான், எலி, கட்டாக்காலி நாய் ஆகிய நோய்க்காவிகளைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை செய்யப்பட்டிருக்கிறது.

தற்போது மழைக் காலமானதால் வழமையிலும் பார்க்க நுளம்புகளின் தொல்லை கூடுதலாயிருக்குமென்பதை அனைவரும் அறிவோம். ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகத் தண்ணீர்த் தேங்கிநிற்கும் உடைந்த பாத்திரங்களும், தகர டப்பாக்களும், வீசி எறியப்பட்ட வேறு கொள்கலன்களும் இருப்பதை அவதானிக்கலாம். இதைவிட பெரும்பாலான வீடுகளில் கழிவு நீர் தேங்கி நிற்பதும், திருத்தப்படாத உடைந்த மலகூடக் குழிகள் இருப்பதும் நுளம்பு பெருகுவதற்கு உதவியாக உள்ளன.

யாழ் மாநகரசபை வேலைப் பகுதியினர் தூர்ந்து போயிருந்த வடிகால்களைத் துப்புரவு செய்து செப்பனிட்டு வருகின்றார்கள். இவ் வடிகால்களில் குப்பை கூழங்களைக் கொட்டி, நீரோட்டத்தைத் தடைசெய்வதும் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகும். மக்கள் கழிவுகளை அன்றாடம் உரிய முறையில் அகற்றாமல் சேர்த்து வைத்திருப்பதால் இலையான் பெருகுவதற்கு இடமளிப்பதாய் முடியுமென்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும்.

நுளம்பை அழிக்கக்கூடிய கிருமிநாசினிகள் கொள்வனவு செய்வதில் இருக்கக் கூடிய இடர்கள் பற்றி மக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். மலேரியா நுளம்பை அழிக்க வல்ல மலத்தியோன் கொள்வனவு செய்வதில் சுகாதார திணைக்களம் மேற்கொண்ட பிரயத்தனம் இன்னும் முழுமையான பலனைத் தரவில்லை. இந்நிலையில் நுளம்பை அழிப்பதை விட, நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதே இலாபகரமானது; பயன்தரவல்லது.

### நிர்வாகசபை கூடியது


### பிரத்தியேக கல்வி நிலையம்

PERSONAL INSTITUTES

இல. 02, சீனிவாசகம் வீதி, கொட்டடி.

கல்வியாண்டு 1993 புதிய வகுப்புகள்
ஆண்டு 5 முதல் 11 வரை

ஆரம்பம்: 5.12.92 (இன்று)
மாலை 3.00 மணி

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | S. வாமதேவன் |
| தமிழ் | — | S. கதிர்காமத்தம்பி |
| ஆங்கிலம் | — | T. சௌந்தரபாண்டியன் |
| சமூகக்கல்வி | — | இ. நிதியானந்தம் |
| வர்த்தகம் | — | A. சிவகுமாரன் |

கிளை: YARL HALL
கல்வி நிலையம்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(374)

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

யூனிவேர்சல்
கந்தர்மடம்—யாழ்ப்பாணம்

புதிய வகுப்புக்கள்
(ஆண்டுகள் 5,6,7,8,9,10,11)

யாவும்



## குடும்பஸ்தர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கையில் விரக்தியுற்றதால் குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். மன்னார் மடுப் பகுதியில் வசித்து வந்த புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாக்கியம் என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தன்னுயிரை மாய்த்துக் கொண்டார் எனக் கூறப்படுகிறது. இவரது தாயார் காலமாகி ஒரு வாரத்திற்குள் இவர் மேற்படி பரிதாபகரமான முடிவைத் தேடிக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

(22)


### 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 31 | 22 |
| 12 | 10 |
| 1973 | 1992 |

கப்டன் பாணன் (வினோத்)
(ஆனந்தராசா குகராஜா)

வீரத்தின் விளைவே
விளைந்ததும் பெருவிருட்சமாய் ஆனவனே
பார்த்திருக்க வளர்ந்து
பதினெட்டு நிரம்பி
பல் வடிவுப முகத்துடன்
பாரினில் விதைக்கப்பட்டவனே
தமிழீழம் தன்னில் தளிர்விட்டு துளிர்க்க
தாயகத்தை தாங்கிட வந்திட்டாயோ

இந்நாளில் உம்முடன் ஈழத்திற்காய் உரமாகிய 14 வேங்கைகளிற்கும் எமது அஞ்சலி.

இந்நிகழ்வில் சுற்றத்தார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிளிநொச்சி, தமிழீழம்.

தந்தை, தாய், சகோதரர்கள்
போராளிகள்

(சி/5533)


### 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 03 | 10 |
| 03 | 06 |
| 1971 | 1992 |

செல்வன்

### 45-வது நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



உச்சப் புள்ளிபெற உதவும் வழிகாட்டி. மூந்நூற்றுக்கு மேற்பட்ட வினாக்களுக்கு விரிவான விடைகள் இராக லட்சணங்கள், இசைக் குறிப்புக்கள், இசைமேதைகளின் வரலாறுகள் கொண்டது எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(3727)

S. வரதராஜன்
B.A. (Hons)

ஆரம்பம்:
**5-12-92**
சனி 2.00 PM

(சி-5523)

கொட்டி, நீரோட்டத்தைத் தடைசெய்வதும் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகும். மக்கள் கழிவுகளை அன்றாடம் உரிய முறையில் அகற்றாமல் சேர்த்து வைத்திருப்பதால் இலையான் பெருகுவதற்கு இடமளிப்பதாய் முடியுமென்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும்.

நுளம்பை அழிக்கக்கூடிய இருமிநாசினிகள் சொரிவனவு செய்வதில் இருக்கக் கூடிய இடர்கள் பற்றி மக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். மலேரியா நுளம்பை அழிக்க வல்ல மலத்தியோன் சொரிவனவு செய்வதில் சுகாதார

## நிர்வாகசபை கூடியது

(யாழ்ப்பாணம்)

சில்லாலை மத்தி ஐக்கிய நாணய சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிர்வாக அங்கத்தவர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் இச் சங்கத்தின் கடமைகளை அவர்களிடையே பகிர்ந்து அளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

யூனிவேர்சல்
கந்தர்மடம்—யாழ்ப்பாணம்

## புதிய வகுப்புக்கள்

**(ஆண்டுகள் 5,6,7,8,9,10,11)**


யாவும்

**05-12-92**

**[சனிக்கிழமை]**
**பி. ப. 3 மணி**

(சி-5521)

## 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 03 — 03 — 1971 | 10 — 06 — 1992 |

செல்வன்
**சி. சுஜீந்திரன் (முகுந்தன்)**
[G. C. E (A/L) மாணவன் 1990]


திதி: 5-12-1992

உங்கள் பிரிவால் துயருறும்
பப்பா, மம்மி, தம்பிமார், தங்கை, அம்மம்மா, அன்ராமார், சித்தப்பாமார். மாமாமார், மற்றும் நண்பர்கள்.

'திருமகள்வாசா'
அல்வாய் கிழக்கு.

(8738)

## 45-வது நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



**2 ம்லெப்டினன்ட் தமிழரசன்**
[சத்தியானந்தன் சிவகுமார்]

தமிழீழ மண்ணில்
1974-10-10

தமிழீழ மீட்புக்காய்
1992-10-2

வெஞ்சமர் புரிந்தே வெல்லவே தாயகம்
வேங்கையாய் தமிழ் அரசன்வந்தான்!
அஞ்சிடா இளையவன் வெஞ்சினம் கொண்டுமே
ஆனையிறவோடு உப்பளத்தில் மோதினான்!
விஞ்சிடும் போரிலே வீரப்புண்பட்டிவன்
வீழ்ந்தபோது; "வெல்கவே ஈழமென்றான்!"
எஞ்சிய இவனடி தொடர்ந்தே நடப்போம்!
ஈழத்தை வெல்வதே இவனுக்கு அஞ்சலி !!!

இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை: சத்தியானந்தன்
தாய்: ராஜலட்சுமி (அமரர்)
சகோதரர்: கிருஷ்ணகுமார், உதயகுமார்
சகோதரி: தமிழரசி
உற்றார், உறவினர்.

இல:46, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(சி/5529)

## நினைவஞ்சலி

**39 ஆம் நாள**



சூரர் மாம்பழம்
29-02-1924 <மலர்வு>
28-10-1992 <மடிவு>

**3 ஆம் ஆண்டு**



சின்னபொடி சூரர்
28-10-1922 <மலர்வு>
09-11-1989 <மடிவு>

பாசம்மிகு அம்மாவே அப்பாவே, பிள்ளைகளை வளர்த்து நல்வழிப்படுத்த உமக்கு ஈடாய் யாருண்டு,விதியின் விளையாட்டோ,அம்மாவொடு அப்பாவையும் சேர்த்தழைத்து விட்டதே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

உங்கள் பிரிவால் வாடும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(3745)

## நினைவு கூருகின்றோம்...

**1992-12-05**

1986 ஆம் ஆண்டு இத்தினத்தில் மட்டு- காத்தான்குடிப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
லெப் அருணன் (சுந்தரம்பிள்ளை விஜயரத்தினம் - வெல்லாவெளி, மட்டு.)

1988 ஆம் ஆண்டுவவுனிக்குளம்,2-ம்படிவம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
காண்டீபன் (கேதாரநாதன் இராமநாதன்-ஒதியமலை)

இதேசம்பவத்தின் போது இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, குழந்தை உட்பட 16 - தமிழர்கள்.

கந்தர்மடம் அம்மன் வீதியில் கொள்ளையிட வந்த தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட உடுப்பிட்டியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் முன்னேற முயன்ற படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -
புவன் (சத்தியநாதன் சிவகுமார் -ஏழாலை மத்தி, யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5532)

நல்லூர் இன நூலகம் மாநகர ... றம் யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

மேலே ஏறிச் செல்லும் வழிதான், கீழே இறங்கி வரும் வழியும் ஆகும்.

— ஹீராக் லீட்டஸ்


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 05-12-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308

த. பெ. என் - 05


## ஆவியின் அச்சுறுத்தல்

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, அவர் பயணம் செய்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுவெடித்ததினாலேயே கொல்லப்பட்டார் என திருமதி லலி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார். அத்தோடு, இக் கொலைகளுக்கு இராணுவத்தினரின் ஒரு பகுதியினரும், அரசாங்கமுமே பொறுப்பு எனவும் தெரிவித்துள்ள திருமதி லலி கொப்பேகடுவ, இது குறித்து சர்வதேச மட்டத்திலான நீதி விசாரணை மேற்கொள்ளப் படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருமதி லலி கொப்பேகடுவவினால் இக் கோரிக்கைவிடுக்கப்பட்டு சில மணி நேரத்திலேயே அவரது கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்து ஜனாதிபதி பிரேமதாசாவின் அந்தரங்கச் செயலாளர் கே. எச். ஜே. விஜயதாசா, திருமதி கொப்பேகடுவவிற்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளார். திரு. பிரேமதாசா விரைவாக செயற்படும் ஒரு தலைவர் எனப் பொதுவாகத் தெரிவிக்கப்பட்டுவரினும், இவ் விடயத்தில் ஜனாதிபதியின் செயற்பாடு மிகத் துரிதகதியானது என்பதில் சந்தேகமில்லை.

கடந்த வருடம் ஜனாதிபதி பிரேமதாசா மீது 'குற்ற விசாரணை கோரும் பிரேரணை' மனு பாராளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டதான செய்தி வெளியான பின்னர் ஜனாதிபதி செயலகம் வேறு எந்த விடயத்திலும் இத்துணை துரிதமாக செயற்படவில்லை ஏன், லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் தளபதிகள் கொல்லப்பட்ட போது கூட நடைபெறவில்லை என்றே கூறலாம். இதில் இருந்தே இவ் விவகாரம் சிறிலங்கா அரசியலில் எத்துணை முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால், சர்வதேச விசாரணைக்குழு அமைப்பதன் மூலம் பிரேமதாசாவின் அரசாங்கத்தின் நம்பிக்கைத் தன்மை சற்று கேள்விக்குள்ளாயினும், இதனால், பெரும்பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இத்தாக்குதலை விடுதலைப் புலிகள்தான் மேற் கொண்டார்கள் என்பதை நிருபிப்பதற்கு அரசாங்கத்திடம் போதியசான்றுகள் இருக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை,

ஆனால், இவ் விவகாரத்தின் மூலம், இரு விடயங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். இதில் ஒன்று, விடுதலைப் புலிகளின் ...

### முன்னாள் டி.ஐ.ஜி. உடுகம்பொலவை

## ஜே. ஆரின் தோட்டங்களில் இரகசியப் பொலிசார் தேடினர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு சொந்தமான இரு பெருந் தோட்டங்கள் இரகசியப் பொலிசாரின் முற்றுகைக்கு உள்ளாகியுள்ளதோடு சோதனைக்கும் இலக்காகியுள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரான பிரேமதாசா உடுகம்பொல இத்தோட்டங்களில் மறைந்து இருப்பதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே சோதனையிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிக்கு சொந்தமான, வியாங்கொட பகுதியிலிருக்கும்குடலி ஏழுவே தோட்டமும், மாதம்பே பகுதியிலிருக்கும் மாரவில தோட்டமும் விசேட இரகசிய பொலிசாரால் சோதப்பட்டனயிடைதோடு தோட்டங்களில் இருந்த இருவர் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்

## கொழும்பு வருபவர்கள் உயில்எழுதவேண்டியநிலை

- ஜீ. எம். பிரேமச்சந்திரா

[கொழும்பு]

இன்று நாட்டில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை யாராவது கொழும்புக்கு வருவதாக இருந்தால் அவர் தமது சொத்துக்களுக்கு உயில் எழுதி வைத்து விட்டுத்தான் வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினரான ஜீ. எம். பிரேமச்சந்திரா கூறியுள்ளார்.

எகலியகொட சந்தியில்நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; நடுக்கடலில் மூழ்கும் கப்பலைப் போன்றதொருநிலையில் நாடு இன்று இருக்கின்றது.

வேலைக்கு சென்றவர்கள் வீடு திரும்பும் வரையும், கடைக்கு, சந்தைக்கு போனவர்கள் வீடு திரும்பும் வரையும், ஏன் வீட்டில் கூட நிம்மதியாக நித்திரை செய்ய முடியாத நிலை நம் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது பற்றிக் கதைக்கவோ, எழுதவோ, மக்களுக்கு சுதந்திரம் இல்லை இதுதானா ஜனநாயகம். இந்த அரசாங்கம் நாட்டில் ஆட்சியில் இருக்கும் வரை மக்களுக்கு நிம்மதியோ சுதந்திரமோ இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தப்பிஓடிய இராணுவக் கொள்ளைக் கோஷ்டி சிக்கியது

(கொழும்பு)

தப்பியோடிய இராணுவத்தினரைக் கொண்டு இயங்கி வந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்றை பொலிசார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இக் கொள்ளைக் கோஷ்டி சுமார் 35 இற்கும் மேற்பட்ட கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புபட்டிருப்பதாக கூறப்படுகிறது மாத்தளைப் பகுதியில் இயங்கிவரும் இக் கொள்ளைக் கோஷ்டியின் தலைவர் என்று கருதப்படும் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவரிடமிருந்து ஜே. ஆர். ரக கைக்குண்டு மற்றும் இராணுவ சீருடை ஆகியவை கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்தனர். மேற்படி நபர் ஏற்கனவே பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுதலையானவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது சகபாடியான மேலும் ஒருவரை அலவத்துகொட என்ற இடத்தில் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக்கருதப்படும் மேலும் இருவரை பொலிசார் தேடிவருகின்றனர். இக் கொள்ளைக் கோஷ்டியின் தலைவரின் காதலி என்று நம்பப்படும் ஒரு பெண்ணையும் வெள்ளவத்தைப் பொலிசார் கைது செய்துள்ளனர் கைது செய்யப்படும் சமயம் இப்பெண் பெருந்தொகையான தங்க ஆபரணங்களுடன் காணப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளுக்கு உதவினார்களாம்

## சிங்கள, முஸ்லிம் இளைஞர்; பொலிசார் தேடுகின்றனர்

(கொழும்பு)

தமிழ் இளைஞர்களுக்கு போலி வாகன அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொடுத்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சிங்களவர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் கொழும்பு பொலிசாரால் தேடப்பட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுகிறது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய இளைஞர்களுக்கு முஸ்லிம் பெயர் கொண்ட போலி வாகன அனுமதிப்பத்திரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டிருந்ததாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

முகத்துவாரத்தைச் சேர்ந்த மேற்படி சிங்கள செல்வந்தரின் வீடு பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டபோது அவர் வீட்டிலிருந்து தப்பியோடி விட்டார் எனவும் வீட்டில் மறைத்து வைத்திருந்த லட்சக்கணக்கான பணம், முக்கிய ஆவணங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போலி வாகன அனுமதிப் பத்திரம் தயாரித்துக் கொடுத்த முஸ்லிம் இளைஞர் இராஜகிரியவில் இருப்பதாகவும் இவரின்இருப்பிடம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

இவர்கள் ஒவ்வொரு இளைஞரிடமும் இரண்டரை இலட்சம் ரூபா பணம் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தெரிவு

(கொழும்புத்துறை)

பாஷையூர் பகுதிக்கான சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் அண்மையில் பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூக நிலையத்தில், அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். கூட்டுறவு தலைமைப் பரிசோதகர் திருச்செல்வம் அங்குரார்ப்பணம் செய்த இவ் வைபவத்தில் யாழ். கூட்டுறவு வெளிக்கள பிரதேச உத்தியோகத்தர் செல்வி மேரி மன்ரேசா சிறப்புரை வழங்கினார். இவ் அங்குரார்ப்பண வைபவத்தை தொடர்ந்து சே. செபஸ்தியாம்பிள்ளை தலைவராகவும், செல்வி குயின்மேரி செயலாளராகவும், பொ. ஞானதாஸ் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கோட்ட மட்டத்திலான வாழ்க்கைத்திறன் பயிற்சி

இத்தமது பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன் கல்வியை அறிமுகப்படுத்தியபாடசாலைகளில் கோட்ட மட்டத்தில் வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் இம்மாதம் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வேலணை கோட்டத்திற்கான பயிற்சிகள் எதிர்வரும் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் யாழ். கனகரத்தின மகா வித்தியாலத்தில் நடைபெற உள்ளது

பருத்தித்துறைக் கோட்டத்திலும் மேற்கண்ட திகதிகளிலேயே யா/ தேவரையர் இந்துக் கல்லூரியிலும் சாவகச்சேரி கோட்டத்திற்கான பயிற்சிகள் எதிர்வரும் 18ஆம், 19ஆம் 20 ஆம்திகதிகளில் யா/ டிறிபேக் கல்லூரியிலும், மருதனார் மடம், பண்டத்தரிப்பு கோட்டத்திற்கான பயிற்சிகள் 26-ம் 27-ம், 28-ம் திகதிகளிலும் நடைபெற உள்ளன.

வாழ்க்கைத் திறன் கல்வியைத் தொடர்ந்துவருபவர்கள் தவறாது இப்பயிற்சிக்கு சமுகமளிக்குமாறு யா. கல்வித் திணைக்கள வாழ்க்கைத்திறன் உயர் அதிகாரி தெரிவிக்கின்றார்.

## எம்பிலிப்பிட்டியா பகுதியில் கறுப்பு டிசெம்பர் பிரகடனம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியாவில் இம் மாதம் கறுப்புடிசெம்பராக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எம்பிலிப்பிட்டியாவில் 31 மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமல் போனதை நினைவு கூரும் முகமாக டிசெம்பர் மாதம் முழுவதையும் கறுப்பு டிசெம்பராக அனுஷ்டிக்குமாறு பெற்றோர்கள் வேண்டியுள்ளனர்.

இம் 31 நாட்களும் காணாமல் போன ஒவ்வொரு மாணவனாக நினைவு கூரப்படுவர் என்றும் அவர்களுக்காக சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுமாறும் கறுப்பு உடைகளை அணியுமாறும் நகரத்தின் முக்கிய இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்கவிடுமாறும் பெற்றோர்கள் வேண்டியுள்ளனர்.

டிசெம்பர் 31 ஆம் திகதியை சோக தினமாக பெற்றோர் அனுஷ்டிக்கவுள்ளனர் எனவும் அன்று அன்னதானம், போதி பூசை, திருப்பலி, தொழுகை, பூசை என்பன இடம் பெறும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## களுத்துறை தடுப்பு முகாமில் 516 தமிழ்க் கைதிகள்

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டிருப்ப...

## இப்படியும் ஒன்று

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையில் இருந்து மொறட்டுவ நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று ... என்று அனைவரும் கருதினர். பொலிசாருக்கு தகவல்கொடுப்பதால் விளையும் சிரமம் காரணமாக அசட்டுத் துணிச்சலு...

## மீனவர்களை விரட்டினர்

பருத்தித்துறை தொண்டமானாறு கடற்பரப்பில் கரையோரப் பகுதியில் ...

கம் வேறு எந்த விடயத்திலும் இத்துணை துரித மாக செயற்படவில்லை ஏன், லெப். ஜெனரல் கொப்பேகடுவ உட்பட ஒன்பது உயர் தளபதிகள் கொல்லப்பட்ட போது கூட நடைபெறவில்லை என்றே கூறலாம். இதில் இருந்தே இவ் விவகாரம் சிறிலங்கா அரசியலில் எத்துணை முக்கியமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால், சர்வதேச விசாரணைக்குழு அமைப்பதன் மூலம் பிரேமதாசாவின் அரசாங்கத்தின் நம்பிக்கைத் தன்மை சற்று கேள்விக்குள்ளாயினும், இதனால், பெரும்பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இத்தாக்குதலை விடுதலைப் புலிகள் தான் மேற் கொண்டார்கள் என்பதை நிருபிபபதற்கு அரசாங்கத்திடம் போதியசான்றுகள் இருக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை,

ஆனால், இவ் விவகாரத்தின் மூலம், இரு விடயங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். இதில் ஒன்று, விடுதலைப் புலிகளின் ஊடுருவல் தீவகப் பகுதிக்குள் அடிக்கடி ஏற்படுகின்றது என்பது, மற்றையது விடுதலைப் புலிகள் தான் இத்தாக்குதலைச் செய்தார்கள் என்பதை நிருபித்து ஆகவேண்டிய பொறுப்புஎன்பவை ஆகும்.

இத்தீர்ப்பு எவ்வாறு அமையினும் திரு. பிரேமதாச குறித்து சில சந்தேகங்கள் ஏற்படுத்து வதை எவரும் தவிர்க்க முடியாது. ஏனெனில், சிறிலங்கா ஜனாதிபதி தனது அரசியலில் எதிரிகள் சிலரை காணாமல் போகச் செய்து விட்டதாக சிங்களவர்கள் மத்தியில் பேசப்படுவதுண்டு.

ஆனால், இக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதி பெரிதும் அலட்டிக்கொண்டதாக இல்லை. எதிர்க்கட்சிகளின் கூக்குரல்களை அவர் பொருட்படுத்தியதாகவும் இல்லை. பத்திரிகைகளின் கிண்டல்களுக்கு அவர் பதிலளிக்கவும் இல்லை. ஆனால், இவ்விவகாரம் அவ்வாறு புறந்தள்ளிவிடக்கூடியதாக இருக்க வில்லை. இவ் விவகாரத்தினால், ஏற்படப்போகும் அரசியல் விபரீதத்தையும், ஆபத்தையும் திரு. பிரேமதாசா தெளிவாக விளங்கிக்கொண்டு விரைவாகச் செயற்பட்டுள்ளார்

இதேவேளை, திருமதி லலி கொப்பேகடுவ இவ் விவகாரத்தில், எதிர்க்கட்சிகளின் அரசியல் சூழ்ச்சிக்குள் சிக்கிக் கொண்டாரா? அல்லது எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபட முடிவுகொண்டு இவ் அறிவிப்பை வெளியிட்டாரா என்பது குறித்து திட்டவட்டமாகக் கூறிவிட முடியாவிட்டாலும், இவர் முழுமையாக எதிர்க்கட்சியைச்சாய்ந்தவர் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இந்நிலையில், தனது கணவரின் மரணம் குறித்து அவர் எழுப்பியுள்ள சந்தேகம் ஓர் அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி என்று விமர்சனம் எழுவதும் தவிர்க்க முடியாது. இதனால், 'மறைந்த கொப்பேகடுவவின் 'புகழ்' பாதிக்கப்படுவதும் தவிர்க்க முடியாதது.

மேலே குறிப்பிட்டவாறு ஜனாதிபதி இம் மரணங்களுக்கும் தனக்கும் தொடர்பில்லை என இலகுவாக நிருபித்துவிட முடியும். ஆயினும், சிறிலங்காவின் ஜனநாயக வரலாற்றில்' அரசியற் கொலைகள் ஒருஅம்சமாக தவிர்க்க முடியாமல் சேர்க்கப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்பதை மட்டும் மறுப்பதற்கில்லை. ஜே.வி.பியின் தலைவர் ரோகணவிஜய வீர உட்பட 60,000 சிங்கள இளைஞர்கள், யுவதிகள் கொல்லப்பட்டமையும் இவற்றின் ஓர் அங்கம் எனக்கூறுவதும் பொருத்தப்பாடானது.

இத்தமது பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன் கல்வியை அறிமுகப்படுத்தியபாடசாலைகளில் கோட்ட மட்டத்தில் வாழ்க்கைத்திறன் பயிற்சிகள் இம்மாதம் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வேலணை கோட்டத்திற்கான பயிற்சிகள் எதிர்வரும் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் யாழ். கனகரத்தின மகா வித்தியாலத்தில் நடைபெற உள்ளது

பருத்தித்துறைக் கோட்டத்திலும் மேற்கண்ட திகதிகளிலேயே யா/தேவரையாளி இந்துக் கல்லூரியிலும் சாவகச்சேரி கோட்டத்திற்கான பயிற்சிகள் எதிர்வரும் 18ஆம், 19ஆம் 20ஆம்திகதிகளில் யா/டிறிபேக் கல்லூரியிலும், மருதனார் மடம், பண்டத்தரிப்பு கோட்டத்திற்கான பயிற்சிகள் 26-ம் 27-ம், 28-ம் திகதிகளிலும் நடைபெற உள்ளன.

வாழ்க்கைத் திறன் கல்வியைத் தொடர்ந்துள்ளவர்கள் தவறாது இப்பயிற்சிக்கு சமுகமளிக்குமாறு யா. கல்வித் திணைக்கள வாழ்க்கைத்திறன் உயர் அதிகாரி தெரிவிக்கின்றார்.

## களுத்துறை தடுப்பு முகாமில் 516 தமிழ்க் கைதிகள்

(கொழும்பு)

களுத்துறை தடுப்புமுகாமில் சுமார் 516 தமிழ்க் கைதிகள் தற்பொழுது தடுத்துவைக்கப் பட்டிருக்கின்றனர்.

இவர்களில் சுமார் 114 பேர் எதுவித விசாரணைகளுமின்றி கடந்த ஒன்றரை வருடமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பலர் பூரண விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ள போதிலும். இவர்கள்தொடர்பான பொலிஸ் அறிக்கைகிடைக்காத காரணத்தினால் இவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## கறுப்பு டிசெம்பர் பிரகடனம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியாவில் இம் மாதம் கறுப்புடிசெம்பராக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எம்பிலிப்பிட்டியாவில் 31 மாணவர்கள் கடத்தப் பட்டு காணாமல் போனதை நினைவு கூரும் முகமாக டிசெம்பர் மாதம் முழுவதையும் கறுப்பு டிசெம்பராக அனுஷ்டிக்குமாறு பெற்றோர்கள் வேண்டியுள்ளனர்.

இம் 31 நாட்களும் காணாமல் போன ஒவ்வொரு மாணவனாக நினைவு கூரப்படுவர் என்றும் அவர்களுக்காக சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுமாறும் கறுப்பு உடைகளை அணியுமாறும் நகரத்தின் முக்கிய இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்கவிடுமாறும் பெற்றோர்கள் வேண்டியுள்ளனர்.

டிசெம்பர் 31 ஆம் திகதியை சோக தினமாக பெற்றோர் அனுஷ்டிக்கவுள்ளனர் எனவும் அன்று அன்னதானம், போதி பூசை, திருப்பலி, தொழுகை, பூசை என்பன இடம் பெறும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## இப்படியும் ஒன்று

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையில் இருந்து மொறட்டுவ நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று திடீரென இடைநடுவில் நிறுத்தப்பட்டது. காரணம் இந்த பஸ்சில் பயணம் செய்த ஒருவர் பயணப்பை ஒன்றை அதே பஸ்சில் பயணம் செய்த ஒருவரிடம் வைத்திருக்கும்படி கூறிவிட்டு மர்மமாக மறைந்து விட்டார். இதனால் பயணப் பையில் இருப்பது வெடிகுண்டு என்று அனைவரும் கருதினர். பொலிசாருக்கு தகவல்கொடுப்பதால் விளையும் சிரமம் காரணமாக அசட்டுத் துணிச்சலுடன் ஒருவர் மெதுவாக அந்தப் பையைத் திறந்தார். சிறுவர்களுக்கான உடை ஒன்றில் மறைந்த நிலையில் உருண்டையாக ஏதோ தெரிந்தது. திறந்தவர் அப்பொருளை தொட்டுப்பார்த்தார். அப் பொருள் வேறொன்றும் அல்ல அப்பிள் பழங்கள்தான்.

## மீனவர்களை விரட்டினர்

பருத்தித்துறை தொண்டமானாறு கடற்பரப்பில் கரையோரப் பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் விரட்டியடித்தனர்,

மீனவர்களை விரட்டியடித்த கடற்படையினர் ஒரு சில மீனவர்களை பிடிப்பதற்கு எத்தனித்த போதிலும் மீனவர்கள் ஒருவாறு கரையை வந்தடைந்தனர். (யோ

## நிவாரணப்பொருள் எடுத்துவர தொண்டர் நிறுவனத்திற்கு தடை

(குருநகர்)

தொண்டர் நிறுவனம் நிவாரணம் வழங்க எடுத்துவரும் உலர் உணவுப் பொருள்கள் புலிகளுக்கு போய்ச் சேர்வதாகக் கூறி அவற்றை கூட்டுப்படைத் தலைமையகமும் புனர்வாழ்வு அமைச்சும் தடைசெய்துள்ளனவாம்.

யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடு நிலைய இயக்குநர் வண-எம்.ஈ பயஸ் அடிகளார் யாழ். அரச அதிபரைக் கண்டு பொருள்களை எடுத்து வர உதவி கேட்ட போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடு நிலையம் நெருக்கடி காலத்திலும், அதற்கு முன்பாகவும் வறிய பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொருள்களை வழங்கிவந்தது

பிற்பாடு கப்பலில் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு தடை செய்யப்பட்டது.

தடை காரணமாக நடு நிலையம் பராமரித்து வந்த முகாம்களுக்கும், பங்குக் கோவில்களுக்கும் நிவாரணப் பொருள்கள் வழங்க முடியாமை இருந்துவருவதை அடுத்து யாழ். அரச அதிபரை இயக்குநர் சந்தித்து விசாரித்தார்.

நடுநிலைய இயக்குநரின்கோரிக்கையை யாழ். அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதத்தில் தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.(21)

## தரமான ஒலிப்பதிவில் "செஞ்சோலை" பாடல்கள்

### போலிகளை வாங்கவேண்டாம்

''செஞ்சோலை''ஒலிப்பதிவு நாடா விற்பனை தொடர்பாக செஞ்சோலை நிர்வாகத்தினர் பின்வரும் அறிவித்தலை விடுத்துள்ளனர்.

''யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலும் நடாத்தப்பட்டுப் பல்லாயிரக் கணக்கானோரின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட செஞ்சோலை பாடல்களின் ஒலிப்பதிவு நாடா தற்போது விற்பனைக்கு வந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ''தமிழோசை'' ஒலிப்பதிவு கூடத்தில் தொழில்நுட்பவசதிகளோடு சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகம் (கோண்டாவில்) தமிழருவி, எழிலகம், மின்வளம், நியூவிக்ரேஸ் ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. மேடையில் இசை நிகழ்ச்சி நடாத்தப்பட்ட போது ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல் ஒலிப்பதிவு நாடா சில இடங்களில் விற்பனை செய்யப்படுவதாக அறிகின்றோம்.

செஞ்சோலை ஆதரவாளர்கள் சிறந்தமுறையில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்களைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மற்றைய நாடாக்களை விற்பனை செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்'' இவ்வாறு அவ் அறிவித்தலில் தெரிவிக்கப்படுகிறது.

## கருத்தரங்கு

இன்று காலை 10-00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ''விவசாயத்தின் முக்கியத்துவமும், அதன் அபிவிருத்தியும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்களை சமுகம் தரும்படி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, வலிகாமப் பிரிவினர்கேட்டுக்கொள்கின்றார்கள்

## மத்திய அரசின் கூற்று உண்மையானதல்ல

– கல்யாண்சிங்

மத்திய துணைப்படையினர் அயோத்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனரே தவிர பணியில் ஈடுபடுத்தப்படவில்லை என்று மத்திய அரசு கூறியிருப்பது உண்மையல்ல என்று உத்தரப் பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங் லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; மத்திய படைகள் உள்ளூர் நிர்வாகிகளின் அனுமதியின்றிப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை மத்திய றிசேவ் படைகளை நாட்டின் எந்தப் பகுதிக்கும் அனுப்பி வைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டென்றும் அரசியலமைப்பு ரீதியாக இந்நடவடிக்கைக்கு தடையேதும் இல்லையென்றும் மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் லோக்சபாவில் அயோத்தி பற்றி நடைபெற்ற நீண்ட நேர விவாதத்திற்கு பதிலளித்துப் பேசும் போதுகுறிப்பிட்டார்.

மேலும் அயோத்தியா சென்றடையும் தொண்டர்களுக்கு தேவையான சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள் எதுவும் இல்லாமலிருப்பது குறித்து மத்திய அரசு ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. அத்துடன் இப் பிரதேசத்தில் தொற்று நோய்கள் பரவக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் மாநில அரசுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## இராணுவ நடவடிக்கைக்கு ஐ. நா. அங்கீகாரம்

(ஜெனிவா)

சோமாலியாவில் பட்டினியால் வாடும் மக்களைக் காப்பாற்றுவதற்காக உணவு உதவி சென்றடைவதை உறுதிப்படுத்தும் பொருட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை அங்கீகாரம் செய்துள்ளது. அங்கு சண்டையில் ஈடுபடும் குழுக்கள் உணவு விநியோகத்தை குழப்புவதைத் தடுப்பதற்காகவே இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும், அமெரிக்காவின் தலைமையில் இந் நடவடிக்கை இடம் பெறுமெனவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

ஈழநாதம்

## 1097 பேர் கைது

(கொழும்பு)

கடல்மார்க்கமாக வடபகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், 1097 பேர் இதுவரை கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இதில் 912 பேர் தமிழ் இளைஞர்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# அணு ஆயுதத் திட்டம் பாகிஸ்தான் தொடருமாம்

(டில்லி)

தெற்காசியாவில் அணு ஆயுத பரவல் தடுப்பிற்காக பாரபட்சமற்ற நியாயமான ஒரு ஏற்பாடு செய்யப்படும் வரையிலும், தனது அணு ஆயுத திட்டத்தை ஒருதரப்பாக நிறுத்தப் போவதில்லை என்று பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில், அணு ஆயுதம் தயாரிக்க இந்தியா முடிவு செய்யுமானால், நிலைமை முழுவதையும் மறு பரிசீலனை செய்ய பாகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார். எனினும் பாகிஸ்தானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்க செனட்டர் லாறி பிரஸ்லர் கூறியதை திட்டவட்டமாக மறுத்த அவர் அணு ஆற்றலை அமைதி நோக்கங்களுக்காகப் பயன்படுத்த பாகிஸ்தான் உறுதி பூண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## பாராட்டு வைபவம்

(கொழும்புத்துறை)

ஐக்கிய நாணய சங்கத்தின் நல்லூர் பிராந்தியச் செயலாளராக கடமையாற்றி தற்போது கோப்பாய் பிராந்தியத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. எஸ் விஜயகுமாருக்கும் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் நல்லூர் பிராந்தியச் செயலாளர் செல்வி மேரி மன்ரேசா ஆகியோரை பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் அண்மையில் பணிப்புரி கற்பகம் சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்றது.

திரு. க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சி. சி வரதராசா, விஜயகுமார், செல்வி மேரி மன்ரேசா உட்படப் பலரும் உரையாற்றினர்.

## கடல்தொழிலாளர் கூட்டம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடல் தொழிலாளர் கூட்டுறவுச்சங்க பொதுக் கூட்டம் வல்வை ரேவடி கடற்பகுதியில் சங்கத் தலைவர் திரு நவைத்திலிங்கம் தலைமையில் இன்று பிற்பகல் 4 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி கெருடாவில் கடற்கரை மைதானத்தில் சங்க உபதலைவர் தலைமையிலும் நடைபெறவுள்ளது.

மற்றும் கடற்தொழிலாளர் சங்க கிளை கூட்டங்கள் இவ் வருட முடிவுக்குள் வடமராட்சி வடக்கு பகுதி கிளைகளின் கூட்டங்கள் நடாத்தப்படவுள்ளதாக மீனவ ஒன்றியச் செயலாளர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (யோ)

அம்பலாங்கொடை பகுதியில்

# பொலிஸாரின் சூட்டிற்கு ஒருவர் பலி, ஒருவர் காயம்

(கொழும்பு)

அம்பலாங்கொடை பகுதியில் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

விளையாடிக் கொண்டிருந்த குழுவொன்றுக்கும், பொலிசாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து விளையாட்டில் ஈடுபட்டவர்களில் ஒரு குழுவினரைக் கைது செய்ய பொலிசார் முயன்றபோது அவர்கள் தப்பியோட எத்தனித்ததாகவும், அப்போது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனவும் கூறப்படுகிறது.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது கொல்லப்பட்ட ஒருவரை தூக்கிக்கொண்டோட முயன்ற போது மற்றொருவரும் காயமடைந்தார் எனத் தெரியவருகிறது. இத் தாக்குதலின் பின் பதினொரு பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## குண்டுகளை மோப்பம்பிடிக்க அவுஸ்திரேலிய நாய்கள்

(கொழும்பு)

கொழும்பில்விடுதலைப்புலிகள் வைத்திருக்கும் வெடிமருந்துப் பொருள்கள், குண்டுகள் என்பவற்றை மோப்பம் பிடிப்பதற்காக அவுஸ்திரேலியாவிலிருந்து பத்து நாய்கள் விமானம் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன. மோப்பம் பிடிப்பதில் பயிற்சி பெற்ற இவ் விசேட நாய்கள் துப்பறிவதில் வல்லவைகள் என்றும், இவை கொழும்பிலும் சுற்றுப்புறத்திலும் சேவைக்கு ஈடுபடுத்தப்படவுள்ளன என்றும் கூறப்படுகிறது.

## இன்று ''வளையாபதி''

(குருநகர்)

யாழ். திருமறைக் கலாமன்றம் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான ''வளையாபதி''யை இசை நாடகமாகத் தயாரித்து இன்று மாலை 6. 30 மணிக்கு மேடையேற்றுகிறது.

யாழ். பிரதான வீதி கலாமன்ற வெளியரங்கில் மேடையேறும் ''வளையாபதி'' இசை நாடகத்தில் கலாமன்ற இளைய பழைய தலைமுறைக் கலைஞர்கள் பங்குகொடுக்கின்றனர். (21)

## கொழும்பு பல்கலைக்கழகம் 10 ஆம் திகதி திறக்கப்படும்

(கொழும்பு)

தற்போது மூடப்பட்டிருக்கும் கொழும்பு பல்கலைக்கழகம் பத்தாம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி மூடப்பட்ட இப் பல்கலைக்கழகத்தை பத்தாம் திகதி மீண்டும் திறப்பதென நேற்று முன்தினம் கூடிய பல்கலைக்கழககவுன்சில் முடிவு செய்துள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாயன்று பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறக்கும்படி கோரி நூற்றுக்கணக்கான மாணவர்கள் கொழும்பு நகர மண்டபத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம்செய்ததும், இம்மாணவர்களிடையே சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் தேச விடுதலை முன்னணிப் பிரமுகர்கள் காணப்பட்டதும் தெரிந்ததே.

## கடதாசி ஆலை கழிவினால் மட்டு. வாவி மீன்கள் அழிகின்றன

(கொழும்பு)

வாழைச்சேனைக் கடதாசி ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் பெருமளவு இரசாயனக் கழிவுகளால் மட்டக்களப்பு வாவியில் உள்ள மீன் இனங்கள் அழிவடைந்து வருகின்றன.

இவ்வாவியில் தற்பொழுது அதிகளவு இரசாயனக் கழிவுகள் கொட்டப்படுவதால் மீன் இனங்கள் மட்டுமல்ல பல நீர்த்தாவரங்களும் அழிவடைந்து வருகின்றன.

## கூட்டுறவுச்சங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு தைமாதத்திற்குப் பின் சேவையில் இணைந்த கூட்டுறவுச்சங்க குதிக்கலாம் என மேற்படி கூட்டுறவுச் சங்கங்களின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் ஊழி

## பிறந்தநாள் வாழ்த்து



அயோத்தியாவில்

## காப்பாளர் நியமிக்க நீதிமன்றம் மறுப்பு

(டில்லி)

அயோத்தியாவில் மாநில அரசால் பொறுப்பேற்கப்பட்ட நிலப்பகுதியை பராமரிக்க உச்சநீதிமன்றம் காப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று விடப்பட்ட கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

அயோத்தியாவின் நிலைமை கவலைக்கிடமானதாக இருப்பதாக செய்தித்தாள்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில் மட்டும் இத்தகைய முடிவு எதையும் மேற்கொள்ள முடியாதென உச்சநீதிமன்றம் தெளிவுபடக் கூறியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை கரசேவை ஆரம்பிக்கும்போது என்ன நடக்கலாம் என்பது குறித்து பத்திரிகைகளில் வெளியான ஊகங்களையும் கவனத்திற் கொள்ள மறுத்துவிட்ட உச்சநீதிமன்றம், அங்கு தனது சார்பில் நியமிக்கப்பட்டவரிடமிருந்து பாதகமான அறிக்கை எதுவும் வந்தால் மட்டுமே உச்சநீதிமன்றம் தலையீடு செய்யும் என்றும் கூறிவிட்டது.

## போசாக்கு நிலை சீராக்க தெரிவுக்குழு நிறுவ முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் போசாக்கு நிலையை சீராக்கும் முகமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரிவுக்குழு ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

இத்தெரிவுக் குழுவை உருவாக்கும் முயற்சியாக இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற இருக்கிறது. இக் கூட்டத்தில் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்கான தெரிவு செய்வது தொடர்பான ஆலோசனை மேற்கொள்ளப்படும். இறுதியில் தெரிவுக்குழு தெரிவு செய்யப்படும். இக் கூட்டத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். இந்த விடயத்தில் ஆர்வம் உள்ளவர்கள் பங்குபற்றலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர் காணிகளில் சிங்களவர் பயிர்ச்செய்கை

(வவுனியா)

செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள தமிழரின் காணிகளில் சிங்களவர் காலபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்தப் பகுதிகளில் புதிதாகக் குடியேறியுள்ள சிங்களவர்கள் உழுந்து மற்றும் நெல் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் காணிகளை விட்டு இடம் பெயர்ந்து வந்த தமிழ் மக்கள் மடுத் திருப்பதி அகதி முகாமிலும் வேறு பகுதியிலும் தங்கியிருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த முன்னாள் தமிழ் மாவட்டசபை உறுப்பினர் ஒருவரின் காணியையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்து அக்காணியில் உழுந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

சிங்களவர்களின் இந் நடவடிக்கை சம்பந்தமாக, வவுனியா நகரில் உள்ள முன்னாள் மாவட்டசபை உறுப்பினர் அரசாங்க அதிகாரிகளுக்கு தன் வேதனையைச் சுட்டிக் காட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது (தி)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

மகளிர் அபிவிருத்தி நிலையம் ''இடம் பெயர்ந்த மக்களுக்கான போசாக்கும் சுற்றுப்புற சுகாதாரமும்'' என்ற

## பட்டதாரி ஆசிரியர் பயிற்சி இன்று ஆரம்பமாகவுள்ளது

### வடபகுதியில் நிலையங்கள் இல்லை

(கொழும்பு)

பயிற்சி ஆசிரியர்களாகச் சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கான துரிதப் பயிற்சி 42 நிலையங்களில் இன்று ஆரம்பமாகவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, வடபகுதியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி மையங்கள் வடபகுதியில் அமைக்கப்படவில்லை.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட 7,000 பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு இந்தப் பயிற்சியை ஒழுங்கு செய்துள்

வர் தலைமையிலும் நடை பெறவுள்ளது.

மற்றும் கடற்தொழிலாளர் சங்க கிளை கூட்டங்கள் இவ் வருட முடிவுக்குள் வடமராட்சி வடக்கு பகுதி கிளைகளின் கூட்டங்கள் நடாத்தப்படவுள்ளதாக மீனவ ஒன்றியச் செயலாளர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (யோ)

கடந்த மாதம் 25 ஆம் திகதி மூடப்பட்ட இப் பல்கலைக்கழகத்தை பத்தாம் திகதி மீண்டும் திறப்பதென நேற்று முன் தினம் கூடிய பல்கலைக்கழகக் கவுன்சில் முடிவு செய்துள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாயன்று பல்கலைக்கழகத்தை

விடுதலை முன்னணிப் பிரமுகர்கள் காணப்பட்டதும் தெரிந்ததே.

இளைய பழைய தலைமுறைக் கலைஞர்கள் பங்குகொடுக்கின்றனர். (21)

# பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி அனுசியா

கொம்மந்தறை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன்—வனிதாமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி அனுசியா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 5-12-1992இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பாச்சி, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், குஞ்சு அன்ரி, சித்தப்பா, ராணிச் சித்தி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(3737)

# றேடியன்ற் கல்வி நிலையம்

புங்கன்குளம், அரியாலை.

**ஆண்டுகள்: 6,7,8,9,10,11**

**அனைத்தும் ஆரம்பம்**

**06-12-92 ஞாயிறு 3 மணி**

எமது ஆசிரியர் குழு:

T. S. S. மோகன், K. S. முத்துலிங்கம்
S K. மகாலிங்கம், A. மீரா, P. குகன்
R. கருணாகரன், R. சிவலிங்கம்,
S பிரேமினி, S. ஜக்சன், K. கிருஸ்ணகுமாரி

[3749]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கடதாசி ஆலை கழிவினால் மட்டு. வாவி மீன்கள் அழிகின்றன

(கொழும்பு)

வாழைச்சேனைக் கடதாசி ஆலையில் இருந்து வெளியேற்றப்படும் பெருமளவு இரசாயனக் கழிவுகளால் மட்டக்களப்பு வாவியில் உள்ள மீன் இனங்கள் அழிவடைந்து வருகின்றன.

இவ்வாவியில் தற்பொழுது அதிகளவு இரசாயனக் கழிவுகள் கொட்டப்படுவதால் மீன் இனங்கள் மட்டுமல்ல பல நீர்த்தாவரங்களும் அழிவடைந்து வருகின்றன.

# கூட்டுறவுச் சங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

1988 ஆம் ஆண்டு தைமாதத்திற்குப் பின் சேவையில் இணைந்த கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த மேலதிக கொடுப்பனவான ரூபா முந்நூற்றி எட்டு நிறுத்தப்பட்டிருப்பதை எதிர்த்து அனேக பல நோசிகுக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கலாம் என மேற்படி கூட்டுறவுச் சங்கங்களின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் 'ஊழியர் தொழிற்சங்கங்கள்' ஊடாக வேலை நிறுத்தம் அல்லது மறியல் போராட்டம் என்பவற்றிற்கான முஸ்தீபு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரஸ்தாப வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (22)

## அஞ்சல்

தாயிரம் வெற்று அட்டைகள் எடுத்துவரப்பட்டதைத் தொடர்ந்து பிரதி அஞ்சல் மா அதிபரின் எல்லா நிர்வாகக் காரியாலயங்களிலும் நாளை நண்பகல் 12 மணிவரை இவை விநியோகிக்கப்படவுள்ளன.

மேற்படி அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பாட்டுக் காரியாலயத்தில் தத்தமது அஞ்சல் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மிதி வெடியில் படை காயம்

(வவுனியா)

வவுனியா - ஹொறவப்பொத்தானை வீதியில் உள்ள குடாகச்ச கொமயில் படையினர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயம் அடைந்தார்.

செவ்வாய் இரவு மேற்படி சம்பவம் நடைபெற்றது. உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

# வர்த்தகர்களுக்கு!

# முக்கிய அறிவித்தல்

பாண் வியாபாரம் செய்யும் சகல வர்த்தகர்களும், தங்களது வியாபார ஸ்தலத்தில், பேக்கரி உரிமையாளர் சங்கத்தினால் வழங்கப்பட்ட பாண் விலம்பரத் துண்டுப் பிரசுரம் ஒட்டி இருத்தல் வேண்டும். இதுவரை ஒட்டாதவர்கள் பாண் வழங்கும் பேக்கரி உரிமையாளர்களிடம் இருந்து பிரசுரம் பெற்று ஒட்டிக் கொள்ளவும். ஒன்றுக்கு மேற்பட்ட பேக்கரிகளில் பாண் எடுத்து விற்பவர்கள் ஒவ்வொரு பேக்கரியினதும் துண்டுப் பிரசுரம் ஒட்டியிருத்தல் வேண்டும். சங்க விதிமுறைகளுக்கு அமைவாக, பாண் விளம்பர துண்டுப் பிரசுரம் ஒட்டாதவர்கள் பாண் விற்பனை செய்ய முடியாது. அது கண்டு பிடிக்கப்பட்டால் எந்த பேக்கரியிலிருந்தும் பாண் விநியோகம் நடைபெற மாட்டாது.

இவ்விளம்பரம் பொதுமக்களின் நன்மை கருதி பிரசுரிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பினையும் நாடி நிற்கின்றோம்.

N. பாலவினாயகர்
செயலாளர்
யாழ். மா. பே. உ. சங்கம்

[3748]

தில் உள்ள தமிழரின் காணிகளில் சிங்களவர் காலபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இந்தப் பகுதிகளில் புதிதாகக் குடியேறியுள்ள சிங்களவர்கள் உழுந்து மற்றும் நெல் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் காணிகளை விட்டு இடம் பெயர்ந்து வந்த தமிழ் மக்கள் மடுத் திருப்பதி அகதி முகாமிலும் வேறு பகுதியிலும் தங்கியிருக்கின்றனர்.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

மகளிர் அபிவிருத்தி நிலையம் "இடம் பெயர்ந்த மக்களுக்கான போசாக்கும் சுற்றுப்புற சுகாதாரமும்" என்ற தலைப்பில் நாளை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்து கல்லூரியில் கருத்தரங்கு ஒன்றை நடாத்த உள்ளது.

இக் கருத்தரங்கில் பங்கு பற்றுவதற்கு இடம் பெயர்ந்த முகாம்களில் தங்கியிருப்பவர்களுள் தன்னிச்சையாகச் செயற்படக் கூடிய 100 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ராணுவத்

டமை விடுதலைப் புலிகளின் தாக்குதலினாலேயேஎன ராய்டருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளமையை ரூபவாகினி முதன்மை கொடுத்து தலைப்புச்செய்தியில் இடம் பெறச் செய்துள்ளமையும் குற்றச்சாட்டில் இருந்து அரசாங்கம் தப்பித்துக்கொள்வதற்கான ஒரு முயற்சியே

## நடவடிக்கை

களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஏற்கனவே பல்வேறு திணைக்களங்களுக்கும் மாற்றம் செய்யப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

1990 இன் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட இப்பிரிவினர் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குற்றச் செயல்களை ஒடுக்குவதிலும், ஐந்து நட்சத்திர ஹொட்டல்கள் உட்பட கொழும்பில் செயற்பட்ட காசினோக்களை செயலிழக்க வைப்பதிலும் முக்கிய பங்காற்றியது குறிப்பிடத்தக்கது.

## புத்தளம்

கடல் மார்க்கமாக வந்திருப்பதாகவும், இவர்கள் வடபகுதியிலிருந்து வந்துசேரும் புலிகளிற்குஇப் பிரதேசத்தில் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

வெற்றி பெற்றிருந்த முன்னாள் தமிழ் மாவட்டசபை உறுப்பினர் ஒருவரின் காணியையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்து அக்காணியில் உழுந்து உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

னியா நகரில் உள்ள முன்னாள் மாவட்டசபை உறுப்பினர் அரசாங்க அதிகாரிகளுக்கு தன் வேதனையைச் சுட்டிக் காட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது (தி)

# பட்டதாரி ஆசிரியர் பயிற்சி இன்று ஆரம்பமாகவுள்ளது

## வடபகுதியில் நிலையங்கள் இல்லை

(கொழும்பு)

பயிற்சி ஆசிரியர்களாகச் சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கான துரிதப் பயிற்சி 42 நிலையங்களில் இன்று ஆரம்பமாகவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, வடபகுதியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி மையங்கள் வடபகுதியில் அமைக்கப்படவில்லை.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட 7,000 பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு இந்தப் பயிற்சியை ஒழுங்கு செய்துள்ளது. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியன பயிற்சிநிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ளன.

## "குமண" நாளை கொழும்பு செல்லும்

[யாழ்ப்பாணம்]

'குமண' கப்பல் நாளை கொழும்புக்குச்செல்லவுள்ளது

கடந்த மாதப் பிற்பகுதியில் உணவுப்பொருள்களுடன்பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்த மேற்படிகப்பல் பொருள்களை இறக்குவதில் ஏற்பட்ட தாமதங்களினால் நாளையே செல்லவுள்ளது. இதில் வெளியூர்த் தபால்கள் கொண்டு செல்லப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

## வட-கிழக்கு

ரோஹான் தளுவத்த ஆகியோர் முறையே ஆகஸ்ட் முதலாம் திகதி, அக்டோபர் முதலாம் திகதி முதல் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இது தவிர ஐந்து கேணல்கள் பிரிகேடியர்களாகவும், ஆறு லெப். கேணல்கள் கேணல்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## ஜெனரேற்றர்

யாழ். போதனா வைத்தியசலைக்கு ஒரு ஜெனரேற்றர் நேற்று 'குமண' கப்பல் மூலம் வந்தடைந்தது.

கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட ஜெனரேற்றர் பலாலிக்கு வந்து காங்கேசன்துறை ஊடாக பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. [யோ]

## நொச்சி மோட்டையில்

திலிருந்து சற்றுத் தொலைத்தூரம் முன்னேறி வந்திருந்தமையால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் மேலும் பலயார் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (தி)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**04.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6935

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3321, 24-6699, 24-5015, 41-5015, 24-5437, 26-4139, 26-9938, 28-1020, 27-4090, 24-6480, 24-5418, 26-2745, 24-6280, 37-4457, 40-3073, 26-3130, 24-0521, 42-1019, 41-2659, 42-3114, 26-3518, 27-5197, 26-3558, 24-8785,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-0427, 24-7340, 24-5036, 40-1737, 28-3735, 27-5058, 28-3303, 41-9997, 24-2680, 24-6489, 28-1992, 24-3844, 26-1745, 24-4207, 26-0649